முருகப்பெருமான் துணை

**மகான் கலிய நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.05.2024,** சனிக்கிழமை

1. ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அரங்கமகா ஞான தேசிகனே
பெருமைபட உன் புகழ்பாடி
புகலுவேன் துல்லிய ஆசி
2. ஆசிதனை குரோதி தகர் திங்கள்
அச்சமற எழுநான்கு திகதி காரி வாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 28 ம் நாள், 11.05.2024, சனக்கிழமை)
ஆசிதனை கலிய நாயனார் யானும்
அறிவிப்பேன் உலகோர் நலம் பெற
3. நலம் தரும் ஞானிகள் பூசை
நாடெங்கிலும் நடத்தல் காண
வளம் சேரும் இயற்கை ஆசிபட
வல்லமை கூடும் ஞானத் தலைமையாக
4. ஆகவே அரங்கமகான் காட்டும்
அற்புதமான உபதேச வழிகளை
வகைபட மக்களெல்லாம் ஏற்று
வணங்கிவர ஞானபலம் கூடும்
5. கூடவே கலியுக மக்கள்தனை
குருவருள் கொண்டு தேற்றவே
சுடரேற்றி வேலவனார் ஆசிபட
சுத்த நெறி கொண்டு அருளும்
6. அருளும் அரங்கமகா ஞானியின்
ஆற்றல்மிகு சன்மார்க்க நெறி
இருளை விரட்டும் சக்தியாக
எங்கும் சமத்துவம் அருளும் வண்ணம்
7. வண்ணமுடன் பரவி வருக
வல்லமைபட ஞானபலமும்
அண்ணல் அரங்கன் தவபலமும்
அணுகுவார்க்கு வரமாகக் கிட்டி

8. கிட்டியே கலியுக மக்கள் தானும்
குருவரங்கன் ஆசி தன்னால்
கட்டம் நட்டம் போக்கி வாழுகின்ற
கவசம் பெற்றவர்களாக சிறப்பர்

9. சிறப்பான வழிகாட்டல் புரிகின்ற
சித்திகள் ஞானம் கொண்டவர்களாக
அறத்தின் பலத்தால் உயர்ந்து
அறிவுத் தெளிவு ஆற்றல் கூடி

10. கூடியே உலகம் எங்கிலும்
குருவரங்கன் புகழை கொண்டு
தேடியே அன்பர்கள் ஒன்றிணைய
தேசிகனின் உயர் சீடர்களாகி

11. ஆகியே உலகமாற்றம் நிகழ்த்த
அளவிலா சேவைகள் ஆற்றி
மகிழவே ஞான ஆட்சி படைப்பர்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—